Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 47

திங்கட்கிழமை
12 ஜனவரி 2026

மார்கழி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



இலங்கையில் உருவாக்கப்படவுள்ள

# புதிய அரசியலமைப்பில் கூட்டாட்சி முறையே தேவை!

## இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் மோடிக்கு தமிழக முதலமைச்சர் கடிதம்

**சென்னை, ஜனவரி 12**

**இலங்கையில் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.** »11



புதையல் தேடிய

## மின்சாரசபை ஊழியர்கள் கைது

கிளிநொச்சி, ஜன.12

புதையல் தோண்ட முயன்ற குற்றச்சாட்டில் மின்சார சபை ஊழியர்கள் நால்வர் கிளிநொச்சியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். »11

## உடைமையில் 'ஐஸ்' இருவர் யாழில் கைது



யாழ்ப்பாணம், ஜன.12

ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாண மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து 5 கிராம் »11

## உயர்தரப் பரீட்சை மீள இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன.12

டித்வா புயல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த 2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இந்தப் பரீட்சைகள் நடைபெறவுள் »11



## ரயிலில் மோதுண்ட இளைஞன் சாவு!

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணம், அரியாலை 13ஆம் கட்டையில் நேற்றுமுன்தினம் நடந்த ரயிலில் மோதியதால் படுகாயமடைந்த இளைஞன் நேற்று உயிரிழந்துள்ளார். »11

பாதுகாப்பு அமைச்சின்

## இணையத்தளத்துக்குள் வெளிநபர்கள் ஊடுருவல்

விசாரணை தீவிரம் விரிவு பக்கம்:-05

## வடக்கு – கிழக்கில் இன்று மிதமான மழை



யாழ்ப்பாணம், ஜன.12

வடக்கு மாகாணத்தின் நிலப் பகுதியில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழந்துள்ள நிலையில் இன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் »11

"எருமை மாட்டுக்கு மேல பெய்யிற மழையும் மோடிக்கு எழுதிற கடிதமும் ஒண்டுதான் கண்டியளோ"

பூச்சந்தி முரளி

## விசேட தேடுதலில் 679 பேர் கைது

கொழும்பு, ஜன.12

நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது 679 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

30 ஆயிரத்து 322 பேர் சோதனைக்கு »11

## வடக்கு ரயில் தடத்தை சீராக்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன.12

டித்வா புயலால் சேதமடைந்த வடக்கு ரயில் தடத்தைச் சீரமைக்கும் பணிகள் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் »11

## வருமான இலக்குகளைக் கடந்து அஞ்சல் திணைக்களம் சாதனை

கொழும்பு, ஜன.12

இலங்கை அஞ்சல் திணைக்களம் 2025 ஆம் ஆண்டில் திறைசேரியால் நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்குகளை விஞ்சிப் பெரும் மீண்டெழு தலைப் பதிவு செய்துள்ளது என்று அஞ்சல் மா அதிபர் ருவான் சத்குமார தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக அஞ்சல் திணைக்களம் நட்டத்தை எதிர்கொண்டுவருவதாகக் கூறப்பட்டு வந்த நிலையில், 2025 ஆம் ஆண்டில் இலங்கை அஞ்சல் திணைக்களம் 13.1 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. இது திறைசேரி எதிர்பார்த்த இலக்கை விட அதிகமானது என அஞ்சல் மா அதிபர் தெரிவித்துள் »11

AAA MEDIA SOLUTION (Pvt) Ltd.
EVENT MANAGEMENT
4 நாட்கள் மட்டுமே !
ஏற்பாட்டில்
வல்வை உதயசூரியன் கழகமும்
வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும் இணைந்து வழங்கும்
வினோத (விசித்திர) பட்டப்போட்டி திருவிழா 2026
இடம் : வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரை
காலம்: 15.01.2026, நேரம் : பி.ப 1.00 முதல்
சரிகமப பாடகர்கள் மற்றும் பிக்பாஸ் பிரபலங்கள் கலந்து சிறப்பிக்கும் சுருதிலயாவின் இசை விருந்து.
ஊடக அனுசரணை உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4313 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 22 33 43 78 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1380 |
| வெற்றி இலக்கினம் | லக்கினம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 28 40 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0339 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 4 4 0 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2419 |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கங்கள் | 09 12 19 32 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6071 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 5 3 1 0 4 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2101 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 16 18 19 28 |
| விசேட எழுத்து | H |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 11.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0187 |
| வெற்றி இலக்கினம் | ரிசபம் |
| வெற்றி இலக்கங்கள் | 34 39 45 |

# சஜித்-ரணில் இணைவதற்கான உயர்மட்டப் பேச்சுகள் மும்முரம்

**கொழும்பு, ஜன.12**

**ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு பிரதான அரசியற்கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கான முதற்கட்டமாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோருக்கு இடையில் கொழும்பு விடுதி ஒன்றில் மிக இரகசியமான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.**

எவ்வித வெளிப்புறத் தலையீடுகளுமின்றி பல மணிநேரம் நீடித்த இந்தக் கலந்துரையாடலில், சஜித் பிரேமதாஸ தனது கடந்தகால கசப்பான அனுபவங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

நவீன் திசாநாயக்க, ருவன் விஜேவர்த்தன மற்றும் அகிலவிராஜ் காரியவசம் ஆகிய மூவரிடமும் முன்கூட்டியே ஆலோசித்த பின்னரே சஜித் பிரேமதாஸ இந்தச் சந்திப்புக்குச் சம்மதித்துள்ளார்.

இரு கட்சிக்களையும் ஒன்றிணைக்கவேண்டியது இலட்சக்கணக்கான ஆதரவாளர்களின் விருப்பம் என்பதை ஏற்றுக்கொண்ட சஜித் பிரேமதாஸ, அதற்காக சில முக்கியமான நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்:

ரணில் விக்ரமசிங்க கட்சி ரீதியாக 'ஆலோசனை' வழங்கும்மட்டத்தில் மாத்திரமே இருக்கவேண்டும்.

இரு கட்சிகளிலும் நாட்டை வழிநடத்தக்கூடிய திறமையான இளைய தலைவர்கள் உள்ளனர், அவர்களே தற்போதைய தேவை.

முதலில் இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுவான வேலைத்திட்டம் அல்லது நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்திப்பின் இறுதியில் சஜித் மற்றும் ரணில் ஆகிய இரு தலைவர்களுக்கும் இடையில் நேரடிச் சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கு சாகல ரத்நாயக்க யோசனை ஒன்றை முன்வைத்தார். இதனைக் கொள்கைரீதியாக ஏற்றுக்கொண்ட சஜித் பிரேமதாஸ அத்தகைய உயர்மட்டச் சந்திப்புக்கு இது தகுந்த நேரமல்ல என்று தெரிவித்துள்ளார்.

தற்போது தேர்தல் நெருக்கடி இல்லாததால் நிதானமாக ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வர முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ச)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 11.01.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0779 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| U | 8 5 4 1 3 3 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 11.01.2026 | ஞாயிற்றுக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3045 | G | 09 47 58 60 | |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.01.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 33 48 54 80 | 5206 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 11.01.2026 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0875 | 27 34 37 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.01.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| தனு | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 09 10 12 34 | 4757 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 11.01.2026 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 12 | 23 28 63 66 | 2221 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.01.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 12 30 54 62 | 2871 |

## பிரதமர் மீதான குற்றச்சாட்டுகளை முற்றிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது!

### கஜேந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும், அவதூறுக் கருத்துகளை முற்றிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். அவர் தனது முகநூல் பக்கத்தில் மேலும் பதிவிட்டுள்ளதாவது-

பிரதமர் என்ற ரீதியிலும், அவரது கட்சியின் ஒரு முக்கியஸ்தர் என்றவகையிலும், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுடன் எமது அமைப்புக்கும் கொள்கை முரண்கள் இருக்கின்றன. எனினும் 6ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஏற்பட்ட சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பில் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அவதூறுக் கருத்துகளை முற்றிலும் நாம் ஏற்றுக்ொள்ளவில்லை-என்றுள்ளது. (க)

## கல்வியைச் சீரழிக்க இடமளிக்கமுடியாது

### சஜித் காட்டம்

கொழும்பு,ஜன.12

நாட்டின் கலாசாரம் மற்றும் அடையாளங்களைப் பாதுகாக்கும்வகையிலேயே கல்விச் சீர்திருத்தங்கள் அமையவேண்டும். ஆனால், தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கல்விக்கு எதிர்காலம் இல்லாத நிலையை உருவாக்கியுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மத்துகம நகரில் உள்ள இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரவின் உருவச்சிலைக்கு முன்னால் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வியைப் புதுப்பிப்பது என்பது அதில் ஆபாசத்தைப் புகுத்துவதல்ல. சீர்திருத்தம் என்ற பெயரில் தனிநபர்களின் தனிப்பட்ட விருப்பங்களை தேசியக் கொள்கையாகத் திணிக்கக்கூடாது. இணையவழிப் பாதுகாப்பை வலுப்படுத்தவேண்டுமே தவிர, கலாசாரத்தைச் சீரழிக்கக்கூடாது.

அரசியலமைப்பில் சிவில் உரிமைகளைப் போலவே கல்வி மற்றும் சுகாதாரத்தையும் மக்களின் அடிப்படை உரிமையாக மாற்ற வேண்டும்.

இலவசக் கல்வியை வலுப்படுத்துவதற்காக அடுத்த வார நடுப்பகுதியில் 'தேசிய ஒன்றியம்' ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்- என்றார். (ச)

## செல்பி விபரீதம்

## 100 அடி பள்ளத்தில் விழுந்த வெளிநாட்டுச் சிறுமி மீட்பு!



கொழும்பு, ஜன.12

எல்லாவெல பகுதியில் மலை உச்சியில் செல்பி எடுக்க முயன்றபோது சுமார் 100 அடி பள்ளத்தில் தவறி விழுந்த வெளிநாட்டுச்சிறுமியொருவர் நேற்றுப் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

குறித்த மலைப்பகுதிக்குச் சுற்றுலா சென்ற வெளிநாட்டுச் சிறுமி, மலை உச்சியில் நின்று செல்பி எடுக்க முற்பட்டபோது நிலைதடுமாறி செங்குத்தான பள்ளத்தில் விழுந்துள்ளார்.

தகவலறிந்ததும் உடனடியாகச் செயற்பட்ட சாகசப் பூங்காவின் அவசர கால கயிறு மீட்புக்குழுவினர் மிகக் கடினமான மலைப்பகுதியில் இறங்கி மீட்புப் பணியில் ஈடுபட்டனர். மீட்புக் குழுவினரின் துரித முயற்சியால் சிறுமி பாதுகாப்பாக மீட்கப்பட்டார்.

தனது மகள் பத்திரமாக மீட்கப்பட்டதைக் கண்ட சிறுமியின் தாய், மிகுந்த உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் மல்க மீட்புக் குழுவினருக்குத் தனது நன்றிகளைத் தெரிவித்தார். (ச)

## அந்நியச் செலாவணி வருவாய் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன.12

இலங்கையின் 2025ஆம் ஆண்டுக்கான பொருளாதாரத் தரவுகளின்படி, வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத்துறை வருவாய் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு 6,575.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த தொழிலாளர் பணப்பரிமாற்றம், 2025ஆம் ஆண்டில் 8,076.2 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.8 சதவீத வலுவான வளர்ச்சியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2026இல் நடைபெறவுள்ள

# தேசியப் பரீட்சைகளின் அட்டவணை வெளியீடு

கொழும்பு, ஜன.12

**2026ஆம் ஆண்டு நடைபெறும் தேசியப் பரீட்சைகளுக்கான அட்டவணையை இலங்கை பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். அதன்படி, இந்த வருடம் ஏழு முக்கியமான பரீட்சைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் முதற்பரீட்சை 2025ஆம் ஆண்டுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சையாகும். இது 2026 ஜனவரி 11ஆம் திகதி நடைபெறுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது.**

சீரற்ற வானிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் மீதமுள்ள பாடங்கள் 2026 ஜனவரி 12ஆம் திகதி முதல் ஜனவரி 20ஆம் திகதி வரை நடைபெறும்.

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை, பெப்ரவரி 17ஆம் திகதி முதல் பெப்ரவரி 26ஆம் திகதி வரை நடைபெறும்.

2026ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 9ஆம் திகதியும், அதனைத் தொடர்ந்து 2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறும்.

2027ஆம் ஆண்டு, முதல் முறையாக கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் பங்கேற்கும் மாணவர்களுக்கான மற்றொரு பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை (GIT) 2026 ஒக்ரோபர் 24ஆம் திகதி நடைபெறும்.

இந்த வருடத்தின் இறுதித் தேசிய பரீட்சையான 2026 கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் 8ஆம் திகதி முதல் டிசெம்பர் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட 2025ஆம் ஆண்டு உயர்தரப் பாடங்களை ஜனவரியில் முடிப்பதும், 2026ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சையை வருட இறுதிக்குள் நடத்துவதும் தேசிய பரீட்சைகள் நாட்காட்டியை அதன் வழக்கமான அட்டவணைக்கு மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கூரைக்குள்ளிருந்து தோட்டாக்கள் மீட்பு!

அம்பாறை, ஜன.12

அம்பாறை மாவட்டம், பாணமை பகுதியிலுள்ள வீடொன்றைப் பழுதுபார்க்கும் போது கூரை ஓடுகளுக்குக்கீழ் மறைத்துவைக்கப்பட்டிருந்த 118 தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டின் உரிமையாளர் தற்போது கொழும்பில் வசிப்பதுடன், தனது சகோதரரிடம் வீட்டைப் பழுதுபார்க்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். இதன்போதே இந்தத் தோட்டாக்கள் சிக்கியுள்ளன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச்சேவை மீள ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன.12

சீரற்ற காலநிலை காரணமாகத் தடைப்பட்டிருந்த நயினாதீவு- குறிகாட்டுவான் இடையேயான தனியார் படகுச் சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

நேற்று ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் படகுச்சேவை இடம்பெற்றது.

இன்று திங்கட்கிழமை முதல் காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை வழமை போன்று அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை படகுச்சேவை இடம் பெறுமென நயினாதீவு தனியார் படகு உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-66)



நெடுந்தீவுக் கடற்கரையில்

## கரையொதுங்கும் இறந்த ஆமைகள்

யாழ்ப்பாணம், ஜன.12

நெடுந்தீவு மணல் கடற்கரையை நெருங்கிய பகுதிகளில் இறந்த நிலையில் 5 கடல் ஆமைகள் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளன.

இதனைப் பொதுமக்கள் அவதானித்து நெடுந்தீவுப் பிரதேச பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். நெடுந்தீவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தியதுடன் உயிரிழந்த ஆமைகளை புதைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தனர். (ச)

## ட்ரோன் விமானங்களை ஒழுங்குபடுத்தத் திட்டம்

கொழும்பு, ஜன.12

ட்ரோன் விமானங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் கெப்டன் தமிந்த ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மனிதர்களை ஏற்றிச்செல்லும் ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா ட்ரோன்கள் என இரண்டு பிரிவுகள் உள்ளன. இவை முறையாக வானில் பறக்கவிடப்படுவதற்கான ஒழுங்குவிதிகளை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இந்த ஆண்டிலிருந்து அவற்றை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். வணிக ரீதியான பெறுமதி கொண்ட அனைத்து ட்ரோன் விமானங்களும் கட்டாயம் பதிவு செய்யப்படவேண்டும். இவற்றை இறக்குமதி செய்வதற்கும் தனியான ஒழுங்குவிதிகள் உள்ளன - என்றார்.

# வீடும் வட்டியும் - 1

அரசியலில நிரந்தர நண்பனுமில்லை, நிரந்தர எதிரியுமில்லை எண்டு சொல்றது எப்பவுமே பொருந்தும். எங்கட அரசியலிலையும் இப்பிடி ஆளை ஆள் எதிர்த்துக்கொண்டிருந்தவை திடீரெண்டு மாமன் மச்சான் மாதிரி தோளில கைபோட்டுக்கொண்டு ஒண்டாத்திரியிறதையும், பாலும் தேனும் மாதிரித் திரிஞ்சவை கீரியும் பாம்புமா மாறுறதையும் கண்டிருக்கிறம். அப்பிடி ஒரு சம்பவம் தான் இப்ப வீட்டுக்கட்சிக்குள்ள நடந்துகொண்டிருக்குது. கிளிநொச்சி வாத்தியாரை கட்சியை விட்டுக் கலைக்கிறதுக்கு எப்பிடிக் கட்டம் கட்டலாம் எண்டு சட்டாம்பியார் கடுமையா பிளான் போட்டுக்கொண்டிருந்தவர். ஏனெண்டால் இப்ப வாத்தியாரைக் கலைச்சால், முந்தின வன்மத்தை வைச்சுத்தான் கலைக்கினம் எண்டு தன்னில பழி விழுந்திடும், கட்சிக்கு கிடைக்கவேண்டிய வாக்குகள் இல்லாமல் போடும் எண்டு சட்டாம்பியாருக்குப் பயம். அதைவிட இப்பிடி வாத்தியாரைக் கலைச்சு விட்டால், தன்ர முதலமைச்சர் கனவும் சில்லெடுப்பாப் போடும் எண்டும் அவர் யோசிச்சிருக்கிறார். ஆனால் வாத்தியாரைக் கட்சிக்குள்ள வைச்சிருந்தால், அந்தாள் இன்னமும் செல்வாக்கைக் கூட்டிக்கொண்டு போடுவார் எண்டதும் சட்டாம்பியாருக்குத் தெரியும். அதால வாத்தியாரைக் கட்சியை விட்டுத் தூக்கவும் வேணும், தனக்குப் பாதிப்பும் வரக்கூடாது எண்ட யோசினையில தான் சட்டாம்பியார் திரிஞ்சவர்.

இப்பிடிப்பட்ட நிலையில தான், பழம் நழுவிப் பாலில விழுந்த மாதிரி இவ்வளவுநாளும் வாத்தியாருக்கு 'ஜீவனா' இருந்த ஒருத்தர், இப்ப சட்டாம்பியாரின்ர சட்டைப் பொக்கெற்றுக்குள்ள வலிய வந்து விழுந்திருக்கிறார். ஊரில அவரின்ர பேரைத் தனியச் சொன்னால் தெரியாது. முன்னுக்கு 'வட்டி' எண்ட அடைமொழியைப் போட்டால் தான் ஆளைத்தெரியும். அப்பிடியான அந்த வட்டிக்காரர், இவ்வளவுகாலமும் வாத்தியாரின்ர செல்லப்பிள்ளையா இருந்தவர். போனமுறை அவர் பார்லிமெண்ட் எலக்சனில சுயேச்சையா எலக்சன் கேட்டதால, அதைச் சாட்டி சட்டாம்பியார் தீர்மானம் கொண்டந்து உந்த வட்டிக்காரரை கட்சியை விட்டே கலைச்சுப் போட்டார். அப்பிடிச் சட்டாம்பியார் கலைக்கேக்க, வாத்தியார் தனக்குச் சப்போட்டாக் கதைக்கேலை எண்டது வட்டிக்காரருக்கு கோபம். "இவ்வளவுநாளும் அவருக்காக வேலை செய்தன், ஆனால் அவர் என்னைக் காப்பாத்தேலை" எண்டு எல்லாரிட்டையும் புலம்பித் தள்ளியிருக்கிறார். அதுக்குப் பிறகு ஆள் "என் வழி தனிவழி" எண்டு தன்னோட கொஞ்சப் பேரைச் சேர்த்துக்கொண்டு அரசியல் செய்யத் தொடங்கிட்டார். உந்த மஞ்சள் உடுப்பு வட்டிக்காரரும், அவரின்ர கும்பலும் தான் அணையாவிளக்குப் போராட்டத்துக்கு வீட்டுக்கட்சியின்ர பதில் தலைவர் போகேக்க, கேளாக் கேள்வி கேட்டு கலைச்சவை.

அதுக்குப் பிறகு சட்டாம்பியார், உந்த வட்டிக்காரர் வீட்ட நேர போய்க் கதைச்சு, மண்டையைக் கழுவி தன்ர விசுவாசியா மாறினால் திரும்பக் கட்சியில சேர்ப்பன் எண்டு சொல்லியிருக்கிறார். அதுக்கு வட்டிக்காரரும் ஓமெண்டிருக்கிறார். (உதைப் பற்றி பட்சி முதலும் ஒருக்காச் சொன்னது) இப்ப அந்த வட்டிக்காரரை ஆயுதமாக்கி, வாத்தியாரை வீட்டுக்கட்சியை விட்டே கலைக்கிற அலுவல்கள் உள்ளால அறம்புறமா நடந்துகொண்டிருக்குது. அப்பிடி என்னென்ன சதிவேலையள் நடக்குது எண்டதை நாளைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## மகரம்

**விழுவதெல்லாம் எழுவதற்கே என்று நம்பும் நீங்கள், எதிர்நீச்சல் போட்டுப் பழகியவர்கள். தர்மம், நியாயத்தின் பக்கம் நிற்பவர்கள்.**

உங்கள் ராசிக்கு 5ஆவது ராசியில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பதால் பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிந்து சீர்செய்வீர்கள். தடைகள் உடைபடும். புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். கிடப்பில் கிடந்த பல வேலைகளை முழுமூச்சுடன் முடிப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். பழைய கடனைத் தீர்ப்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கணவன் -மனைவிக்குள் இருந்து வந்த காரசாரமான விவாதங்கள் மறையும். தள்ளிப்போன சுபகாரியங்கள் கைகூடி வரும்.

சொந்த ஊர்க் கோயில்களில் முதல் மரியாதை கிடைக்கும். பிள்ளைகளின் நீண்டநாள் கனவுகளைப் பூர்த்தி செய்வீர்கள். குழந்தை இல்லாத தம்பதிக்கு வாரிசு உருவாகும். தம்பி, தங்கையின் கல்யாணம் தடையின்றி முடியும். அரைகுறையாக நின்றுபோன வீட்டை முழுமையாகக் கட்டி முடிக்க வங்கியில் கடன் கிடைக்கும். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில் அனுபவமிகுந்த வழக்கறிஞரைக் கலந்தாலோசிப்பது நல்லது.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 6ஆம் வீட்டில் நிற்பதால் காரியத்தடைகள், அலைச்சல் வரக்கூடும். குடும்பத்தில் குழப்பங்கள் நிலவும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 7ஆம் வீட்டுக்குச் செல்வதால் திடீர் பணவரவு உண்டு. 14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 8ஆம் வீட்டுக்குச் செல்வதால் வாகனத்தில் கவனம் தேவை.

14.5.2026 முதல் 8.6.2026 வரை 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால், நகைகளை கவனமாகக் கையாளுங்கள். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. 12.11.2026 முதல் 31.12.2026 வரை 8ஆம் வீட்டில் செவ்வாய் மறைவதால், அந்தரங்க விஷயங்களை வெளியே சொல்லவேண்டாம். இந்த வருடம் முழுவதும் சனிபகவான் ராசிக்கு 3ஆம் இடத்தில் நிற்பதால் தைரியமான முடிவெடுப்பீர்கள். புதிய பதவிகள் தேடிவரும். டிச.4ஆம் திகதி வரை ராகு 2ஆம் வீட்டில் நிற்பதால் வீண் விவாதங்கள் வரக்கூடும். யாருக்காகவும் பிணைக்கு கையெழுத்திடவேண்டாம். ராகு 8ஆம் வீட்டுக்கு வருவதால் வாகனத்தில் சிறுசிறு விபத்துகள் நிகழும். டிச.5ஆம் திகதி முதல் ஜென்ம ராகுவாக வருவதால் எதிர்காலத்தைப் பற்றிய பயம் வரும். கேது 7ஆம் வீட்டுக்கு வருவதால் கணவன்-மனைவிக்குள் வீண் வாக்குவாதங்கள் வரும்.

இல்லத்தரசிகளுக்கு கணவர்வழி உறவினர்களால் ஆதாயமுண்டு. குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் மாறும். கன்னிப் பெண்களுக்கு கல்லூரிப் படிப்பில் வெற்றியுண்டு. மாணவ மாணவிகளுக்கு படிப்பில் ஆர்வம் பிறக்கும்.

புதிய கலைகள் கற்றுக்கொள்ள முயற்சிப்பீர். தொழில் துறையில் முன்னேறும் வாய்ப்புகளைப் பெறுவீர். உணவு, துணி தொடர்பான தொழில்கள் தொடங்கலாம். அக்கம் பக்கத்தினர், உறவினரின் அவச்சொல்லுக்கு செவிசாய்க்க வேண்டாம். சிலருக்கு அரசுப் பணி கிடைக்கவும் வாய்ப்பு உண்டு.

வியாபாரிகளுக்கு பற்று வரவு உயரும். போட்டிகளைத் தவிடுபொடியாக்குவீர்கள். வராது என்றிருந்த பாக்கி தானாக வந்துசேரும். பழைய கடையை மாற்றியமைப்பீர். வேலையாட்களை அரவணைத்துப் போவீர்கள். கண்ணாடி, ஆடை, பெற்றோல், டீசல் வகைகளால் இலாபமடைவீர்கள். கூட்டுதொழிலில் தள்ளிப்போன ஒப்பந்தங்கள் மீண்டும் கைக்கு வரும். பங்குதாரர்களும் உங்களைப் புரிந்துகொள்வார்கள். முக்கியமான பிரமுகர்கள், பிரபலங்களைச் சந்திக்க நேரும்.

கலைத்துறையினருக்கு தள்ளிப்போன வாய்ப்புகள் தேடிவரும். வீண் விமர்சனம், வதந்தியிலிருந்து விடுபடுவீர்கள். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றிபெற வைப்பதாக அமையும்.

**பரிகாரம் : ஸ்ரீ லட்சுமி நரசிம்மரை ஏகாதசி திதியில் அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் பசு நெய்யில் சிவப்புத் திரியிட்டு விளக்கேற்றி வணங்குங்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.**



# மார்கழிப் பஜனை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜன.12

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் 54ஆவது வருடாந்த மார்கழிப் பஜனை ஊர்வலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

சிறிய மஞ்சத்தில் வரதராஜப் பெருமாள் எழுந்தருள அதனைத் தொடர்ந்து அடியவர்கள் தெய்வீகப் பஜனைப் பாடல்கள் பாடியவாறு பக்திபூர்வமாகக் கலந்துகொண்டனர். (ச-41-66)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.12

துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அபிஷேகத்துடன் ஆரம்பமாகி வசந்தமண்டபப் பூசை இடம் பெற்று காளிகாம்பாள் வீதியுலா வந்தார். தொடர்ந்து இரவுப் பூசை இடம்பெற்று காளிகாம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வந்தார். பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (ச-41-100)

# ப.நோ.கூ.சங்கங்களில் பொங்கல் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், தைப்பொங்கலை முன்னிட்டு நியாய விலையில் பொங்கல் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்களில் தீட்டல் பச்சை அரிசி, சர்க்கரை, பயறு, போன்ற பொருள்களை நியாய விலையில் நுகர்வோர் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க-17)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாகமுடியும். மாலையில் குடும்பத்துடன் வீட்டில் தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**இடபம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** மனதில் அவ்வப்போது இனந்தெரியாத சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வருகை செலவுகளை ஏற்படுத்தும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**கடகம்** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**துலாம்** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். புதிய முயற்சிகளில் சிந்தித்து ஈடுபடவும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மகர[illegible]** உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொ[illegible]றிக்கொள்ளும். குடும்பத்தில் பெரியவர்[illegible]ளின் ஆலோசனை பயனுள்ளதாக இரு[illegible]கும்.

**கு[illegible]ம்** இன்று நினைத்த காரியத்தை மு[illegible]வதில் நேரமும் பணமும் விரயமாகு[illegible] பிற்பகலுக்குமேல் எதிர்பாராத செ[illegible]வுகள் ஏற்படும்.

**மீ[illegible]** அனுகூலமான நாளாக இருக்கும். நண்[illegible]ர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வரவேற்கத்தக்கது. ஆனால்...!

மூன்பள்ளிகளை தேசியக்கொள்கையின்கீழ் கொண்டுவரவும், பொதுவான பாடத்திட்டங்களை உருவாக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணசபைகளுக்குக்குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின்கீழ், முன்பள்ளிகள்அனைத்தும்மாகாணசபைகளாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. இதனால், இலங்கையைப் பொறுத்தவரை ஒன்பது மாகாணங்களிலும், ஒன்பது விதமாகவே முன்பள்ளிக் கல்வித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டின் அடிப்படைக் கல்வியான முன்பள்ளிக்கல்வி, குழந்தைகளின் ஆளுமை விருத்தியில் பெரும் செல்வாக்குச்செலுத்தும் நிலையில், அதற்குரிய கனதியை இதுவரை ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கொடுத்ததேயில்லை. ஆதலால், ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் மேற்கொள்ளும் எத்தனிப்பை பாராட்டுவதில் தவறில்லை.


ஆனால், தற்போதும்கூட இந்த மறுசீரமைப்பு முறையாக மேற்கொள்ளப்படுகின்றதா? என்று கேட்டால், 'இல்லை' என்பதே விவாதங்கள் இன்றிய ஒற்றைப் பதில். முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவு விவகாரம் மிக நீண்ட காலமாகவே சர்ச்சைக்குரியதாக இருந்து வருகின்றது. நாடெங்கும் நூற்றுக்கணக்கான போராட்டங்கள், வலியுறுத்தல்கள், அறிக்கைகள், மனுக்கள், கண்டனத் தீர்மானங்கள் எனப் பலவற்றைக் கண்ட பின்னரும், ஆறாயிரம் ரூபாவே அவர்களுக்குரிய 'மாதாந்த' ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு ஆறாயிரம் ரூபாவுக்கு மேல் ஊதியம் பெறுவோர் கூட, அது போதாது என்றுகூறி புதிய ஊதிய ஒப்பந்தங்கள் கோரி போராட்டம் நடத்தும் இந்தக் காலத்தில், மாதாந்த ஊதியமாக ஆறாயிரம் ரூபாவை வரையறுப்பது எவ்வகையில் தகும்?

முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினை என்பது, அவர்களுக்கான தனிப்பட்ட விவகாரம் அல்ல. உண்மையில் இதுவொரு தேசியப் பிரச்சினை. ஆறாயிரம் ரூபாவை ஊதியமாகப் பெறும் அவர்களின் மனவழுத்தம் வார்த்தைகளால் அளந்தெழுத முடியாதது. அத்தகைய அழுத்தத்துடன் மேற்கொள்ளப்படும் கல்விச் செயற்பாடுகள் ஒருபோதும் நிறைவாக அமையாது. கொடுப்பனவுகள் சீராக இருக்கும் பட்சத்தில்தான் கல்வி நிறைவாக அமையும். நிறைவான முன்பள்ளிக் கல்வியே, நாட்டின் அடிப்படைக் கல்விக்கட்டமைப்பை நிறைவுசெய்யும். பலவீனமான அத்திபாரங்கள் ஒருபோதும் வலிய கட்டடங்களைத் தாங்காது. அத்திபாரங்கள் எவ்வளவுக் கெவ்வளவு வலிமையாக அமைகின்றதோ அதுவே கட்டடத்தின் வளமும் பலமும். இந்தச் சித்தாந்தம் முன்பள்ளிக் கல்விக் கட்டமைப்பில் முற்றாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

நாட்டின் கல்விக் கட்டமைப்பை எத்தனையோ எதிர்ப்புக்கும் சவாலுக்கும் மத்தியில் மறுசீரமைத்தே தீருவது என்பதில் பிரதமர் ஹரிணி விடாப்பிடியாக உள்ளார். அவமதிப்புகள், தனிமனிதத் தாக்குதல்கள் என எத்தனையோ விடயங்களை 'இடது கையால்' கையாளும் அவரின் பக்குவமும், வலிமையும் பாராட்டத்தக்கவை. அப்படிப்பட்ட அவர், எதிர்ப்பே இல்லாத இந்த விடயத்தில் தன் முழுப்பலத்தையும் வெளிப்படுத்துவாராயின் வரலாறு நிச்சயம் அவரை நினைவிற்கொள்ளும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை**

**பொருள்:** யாருக்கு உணவுப்பொருள்களை விளைவித்துத்தர மழை பயன்படுகிறதோ, அவர்களுக்கே அந்த மழை அவர்கள் அருந்தும் உணவாகவும் ஆகி அரிய தியாகத்தைச் செய்கிறது.




பாதுகாப்பு அமைச்சின்

# இணையத்தளத்துக்குள் வெளிநபர்கள் ஊடுருவல்

*விசாரணை தீவிரம்*

**கொழும்பு, ஜன.12**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் வெளிநபர்களால் ஊடுருவலுக்கு உள்ளானமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உத்தியோகபூர்வ இணையத்தளம் பல சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினரின் கட்டுப்பாட்டிற்குள் சென்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பிரச்சினையைச் சீர்செய்வதற்காக இலங்கை கணினி அவசர தயார்நிலைப்பிரிவு மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் ஆகியவற்றின் ஊடாகத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மட்டத்திலும் உள்விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## பாதாளக்குழு உறுப்பினர் டுபாயில் கைது


டுபாய், ஜன.12
பாதாள உலகக்குழு உறுப்பினரான 'கொண்ட ரஞ்சி' என்று அழைக்கப்படும் ரஞ்சித் குமார இத்தாலிக்குத் தப்பிச்செல்ல முயன்றபோது டுபாயில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் ஒருங்கிணைப்புச் செயலாளரின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவரே இந்தக் 'கொண்ட ரஞ்சி' என்ற ரஞ்சித் குமார எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜன.12
நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.
குச்சவெளி பள்ளி முனைப்பகுதியில் நேற்றுமுன்தினம் மின்சாரம் தாக்கி 16 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதே வேளை, ரஸ்நாயக்கபுர தலாகொலவேவ பகுதியில் மின்சாரம் தாக்கி 75 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். (ச-இ)

## எதிர்க்கட்சி எம்.பி.க்கு சி.ஐ.டி. அழைப்பு!

ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசாத் சிறிவர்த்தனவுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பாணை விடுத்துள்ளது. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின்போது, தெரிவித்த கருத்துத் தொடர்பாக வாக்குமூலம் அளிக்குமாறு அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## உள்ளூர் விமானசேவையை வலுப்படுத்தத் திட்டம்!

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு விமானசேவைகளை வலுப்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்படுமெனத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார். உயர் ரக சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு ஈர்க்க, சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் அநுர கருணாதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார். (ச)

நாளை

செவ்வாய்க்கிழமை - மார்கழி 29

13.01.2026

சுபநேரம் : 11.03 - 12.33
ராகுகாலம் : 03.33 - 05.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மன்னாரில் கடற்கரையோர பிரதேசங்களுக்குள் கடல்நீர்

## *மீன்பிடித்தொழிலும் முடங்கியது!*

**மன்னார், ஜன.12**

**மன்னார் மாவட்டத்தில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை மற்றும் கடற்கொந்தளிப்புக் காரணமாக கரையோரக் கிராமங்களுக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ளதுடன், மீனவர்களின் வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.**

தொடர்ச்சியான மழை மற்றும் காற்றின் வேகம் அதிகரித்துள்ள நிலையில், மன்னாரின் பள்ளிமுனை, பனங்கட்டுக்கொட்டு, எமில் நகர் உள்ளிட்ட கடற்கரையோரப் பகுதிகளில் கடல்நீர் ஊருக்குள் புகுந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், கரையோரக் குடியிருப்புகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

அதேவேளை விடத்தல்தீவுத் துறை ஊடாக கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்குப் பலத்த காற்று மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தின் ஏனையபகுதி மீனவர்களும் தொழிலுக்குச் செல்லாமல் படகுகளைக் கரையோரத்தில் பாதுகாப்பாக நிறுத்திவைத்துள்ளனர். தொடர்ச்சியாகத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாமல் போயுள்ளதால், நாளாந்த வருமானத்தை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் பெரும் பொருளாதாரச் சிரமங்களை எதிர்கொண்டுள்ளன. (ச-56)

## இலவச கலை வகுப்புகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன.12

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துசமய, கலாசார கற்கைகள் நிறுவகத்தின் ஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சிநிலையம் ஊடாக நாவலர் கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இலவசக் கலைவகுப்புகளை நடத்திவருகிறது. இதன் புதிய பிரிவுகள் நாவலர் கலாசார மண்டபப் பொறுப்பதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் ஆகியோரின் மேற்பார்வையில் ஆரம்பமாகவுள்ளன.

ஆண், பெண் இருபாலாருக்குமான யோகாசனம், மிருதங்கம், வயலின், கர்நாடக சங்கீதம் முதலான வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் இம்மாதம் ஆரம்பமாகவுள்ளன. மூன்று மாதகாலப் பயிற்சி நிறைவில் யோகாசனச் செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்துபவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். வகுப்புகளில் இணைய விரும்புபவர்கள் நேரடியாகவோ அல்லது 0777030587 எனும் தொலைபேசி எண்ணுடனோ தொடர்பை ஏற்படுத்திப் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-41)



## விபத்தில் இருவர் காயம்

வவுனியா,ஜன.12

மோட்டார் சைக்கிள் - கார் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து வவுனியா பூந்தோட்டம் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள் அதேதிசையில் சென்ற காருடன் பின்புறமாக மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-110)



## முன்னணியினரின் ஏற்பாட்டில் தமிழாராய்ச்சிப் படுகொலை நினைவு

யாழ்ப்பாணம்,ஜன.12

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 52ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணத்திலுள்ள தமிழாராய்ச்சிப் படுகொலை நினைவேந்தல் தூபியடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், உயிர் நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ்ஆராய்ச்சி மாநாட்டில் 11 பேர் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-27)

## மகேஸ்வரன் வீதி காரைநகரில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

இந்து கலாசார முன்னாள் அமைச்சரின் நினைவாக காரைநகர் சின்னாலடி வீதியின் பெயர், 'மகேஸ்வரன் வீதி' என மாற்றம் செய்யப்பட்டு அதன் பெயர்ப்பலகை நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் சேவைகளைக் கௌரவிக்கும்வகையில், சின்னாலடி வீதியை அவரது பெயரில் மாற்றுவதற்கு காரைநகர்ப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் க.பாலச்சந்திரனால் 2018ஆம் ஆண்டில் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

நீண்ட முயற்சிகளின் பயனாக, குறித்த தீர்மானம் கடந்த 2022 டிசெம்பர் மாதம் அரச வர்த்தமானியில் உத்தியோகபூர்வமாகப் பிரசுரிக்கப்பட்டது.

அதற்கமைய அமரர் மகேஸ்வரனின பிறந்த தினமான நேற்று காரைநகர்ப் பிரதேசசபையின் தற்போதைய உறுப்பினர் செந்தூரனின் விசேட வேண்டுகோளுக்கிணங்க இந்தப் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. காரைநகர்ப் பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணன் கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேசசபை உபதவிசாளர், சபை உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)



## மன்னார் நகருக்கான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

மன்னார்,ஜன.12

மன்னார் நகரிலுள்ள தபால் கந்தோர் வீதியை உடனடியாகப் புனரமைத்துத் போக்குவரத்து இடையூறுகளை நீக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரனுக்கு 70 பேர் கையொப்பம் இட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்படுள்ளதாவது-

மன்னார் நகருக்குப் பிரதானமாக தபால் கந்தோர் வீதி அமைந்துள்ளது. இந்த வீதிக்கு அருகாமையில் மன்னார் பிரதான தபால் கந்தோர், மெதடிஸ்த ஆலயம், மெதடிஸ்த முன்பள்ளி, மடு மாதா மருத்துவமனை, மாற்றுத்திறனாளிகள் சிறுவர் பாடசாலை, பொலிஸ் நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வைரவர் கோவில், புகைப்படக் கலையகம், தொலைத் தொடர்புப் பணியகம் எனப் பல உள்ளன. இந்த வீதி மன்னார் தலைமன்னாருக்கும் பிரதான போக்குவரத்து வீதியாகவுள்ளது.

வருடந்தோறும் இந்த வீதியில் மழைக் காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. போக்குவரத்துக்கு மிகவும் மோசமான வீதியாக இது மாறியுள்ளது. எனவே இந்த வீதியை உடனடியாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறி சிவன் ஆலயத்துக்கான நிலம் மற்றும் பாதையை விடுவியுங்கள்

## வடக்கு ஆளுநருக்குக் கடிதம்

**வவுனியா, ஜன.12**

**நெடுங்கேணி- வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கான நிலம் மற்றும் பாதையை விடுவித்துத் தரவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வரலாற்றுத் தொன்மைமிக்க வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டுச் செயற்பாடுகளுக்காக ஆலயம் அமைந்துள்ள பகுதியின் ஒரு ஏக்கர் காணியை ஆலயத்துக்கு விடுவித்துத்தர ஆவன செய்ய வேண்டும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பாக ஏற்கனவே தங்களிடம் கோரிக்கை முன்வைத்தபோதும், திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்துக்குச் செல்லும் பாதையை வவுனியா வடக்குப் பிரதேசசபைக்கு விடுவித்துத்தரும் பட்சத்தில் அந்தப் பாதையைத் தம்மால் சீரமைக்கமுடியும் என்று வவுனியா வடக்குப் பிரதேசசபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் தாங்கள் நேரடியாகத் தலையீடு செய்து குறித்த வரலாற்றுத் தொன்மைமிக்க ஆலயத்துக்கான காணி மற்றும் பாதையை மிகவிரைவாக விடுவித்துத்தர ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர், வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர், வெடுக்குநாறிமலை ஆலய அறங்காவலர் சபையினருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (எ-110)

# இந்த அரசாங்கத்துக்கு போதிய அறிவில்லை!

*அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு*

கொழும்பு,ஜன.12

இந்த அரசாங்கத்திற்கு போதியளவு அனுபவம் கிடையாது என அஸ்கிரிய பீடாதிபதி வராகொட ஸ்ரீ ஞானரதன தேரர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களைச் சந்தித்தபோது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வித்துறையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு இந்த அரசாங்கத்துக்கு அனுபவம் கிடையாது.

கல்வியின் ஊடாகவே நாட்டின் மாண்பு பாதுகாக்கப்படுகின்றது. நாட்டின் மாண்புகளுக்கு குந்தகம் ஏற்படக்கூடிய வகையிலான செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது.

எனவே அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து இந்த விடயம் தொடர்பிலான நடவடிக்கைகள் எடுப்பது பொருத்தமானது - என்றார். (ச)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறும் வாராந்தச் சொற்பொழிவு நிகழ்வில் ஓய்வுநிலை ஆசிரியர் துரை கணேசமூர்த்தி 'திருவாசகம் எனும் தேன்'எனும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவை ஆற்றினார். (ச-66)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுக் காலை அதிகளவான பனிமூட்டமான காலநிலை நிலவியது. வீதிகளில் பயணித்தோர் போக்குவரத்தில் சிரமங்களை எதிர் கொண்டனர். (க-113)





ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவிப் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பிரம்மியா தினேஷ்குமார் தனது பணிப்பொறுப்புகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார். (க)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மலையக தியாகிகள் தினம்

யாழ்ப்பாணம்.ஜன.12

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மலையக தியாகிகளின் நினைவு தினம், யாழ்.பல்கலைக் கழக பொதுத்தூபியில் நேற்றுமுன்தினம் கடைப் பிடிக்கப்பட்டது.



மலையகத்தில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளையும், உரிமைக்காகப் போராடி உயிர்நீத்தவர்களையும் நினைவுகூர்ந்து ஈகைச்சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நினைவுரை ஆற்றினர். (க)

# புங்குடுதீவு வீதிகளில் மரக்கன்றுகள் நடுகை



யாழ்ப்பாணம்,ஜன.12

சூழலியல் மேம்பாடு அமைவனம் அமைப்பு மற்றும் வனவளப் பரிபாலனத் திணைக்களமும் இணைந்து புங்குடுதீவில் 200 பயன்தரு மரக்கன்றுகளை நடுகை செய்தன. புங்குடுதீவு பிரதான வீதி மற்றும் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் வீதிகளில் பாதுகாப்புக் கூடுகளுடன் இணைந்ததாக மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன. அதேவேளை ஏற்கனவே நடுகை செய்யப்பட்ட மரங்களுக்கான பாதுகாப்புக்கூடுகளும் சீரமைக்கப்பட்டன.

இந்தச் செயற்றிட்டத்துக்கு புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நகுலேஸ்வரன் 50 ஆயிரம் ரூபாவையும், ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் கே.வி. தவராசா 25 ஆயிரம் ரூபாவையும், சூழலியல் மேம்பாடு அமைவனம் அமைப்பின் உப தலைவர் கருணாகரன் குணாளன் 25 ஆயிரம் ரூபாவையும் நன்கொடையாக வழங்கியிருந்தனர். அதேவேளை இந்தத் திட்டத்தில் இணைந்த 13 செயற்பாட்டாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கு உலருணவுப் பொருள்கள், சுகாதாரப் பாதுகாப்புப் பொருள்கள் மற்றும் நுளம்பு வலைகள் ஆகியன வழங்கப்பட்டன. (க-66)



யாழ்ப்பாணம் – நல்லூர் இராசதானியில் 500 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகரசபை உறுப்பினர் ராஜ்குமாரின் ஏற்பாட்டில், புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் அவை கையளிக்கப்பட்டன. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடந்தாண்டு

# தென்மராட்சியில் 109 பேருக்கு டெங்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் டெங்கினால் 109 பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என சுகாதாரப் பகுதிப்புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளனர். இவர்களில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 45 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

**The Royal College of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில.
வேலை செல்வோருக்கு
மாலை 6 மணிக்குப்பின்
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
பிரான்பற்று வீதி, சங்கானை
தொடர்பு: 077 675 1649
(CS 60467) E

## பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கடைத்தொகுதியின் மேற்தளம் நிர்மாணிப்பதற்கான கூலி வேலைக்கான கூறுவிலை கோரல்

மாடிக்கட்டடங்களை நிர்மாணிப்பதில் அனுபவமுடைய கூலி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்படி கடைத்தொகுதியின் மேற்தளத்தினை நிர்மாணிப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

தகுதியுடையோர் சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தினைப் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 25.01.2026 இற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தலைவர், பருத்தித்துறை ப.தெ.வள.அபி.கூட்டுறவுச் சங்கம், கிராமக்கோட்டடி, புலோலி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். மேலதிக விபரங்களை சங்கத்தின் தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

**கிராமக்கோட்டடி,**
**புலோலி**
**021 2260032**

**தலைவர்,**
**சி.சிவகுமார்.**

(CS 46877) E

# மரண அறிவித்தல்

## திரு. கந்தையா இராசரத்தினம் (இராசா)

**தோற்றம்** 27.04.1935 **மறைவு** 11.01.2026

பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், விழிசிட்டி தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் அவர்கள் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லாச்சி தம்பதிகளின் இளைய புதல்வனும், சிவநாயகி இராசரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் மயில்வாகனம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கோவிந்தசாமி (ஓய்வு பெற்ற கூட்டுறவு உத்தியோகத்தர்), முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

கிருபாகரன் (நல்லூர் கமநல சேவை நிலைய முகாமைத்துவ உதவியாளர்), நந்தினி, தனஞ்சயன் (ஆசிரியர், யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட ம.வி), திருவேட்கரன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.K. ஹேமலதா (மாவட்ட சித்த வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), பா.சத்தியகுமார், சஞ்சிகா (மருந்தியலாளர்), தி.சுவேந்தினி ஆகியோரின் மாமனாரும், துஷானி, கோபிஷா, தர்ஷாந், கிருஷாந், கிஷாந்தினி, தரேஸ், டினோஜன், கோபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வித்தகபுரம் கொப்பிலாகடவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விழிசிட்டி,**
**தெல்லிப்பளை.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 922 9022**

(CS 60438) E

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவுதின அஞ்சலி

**அன்னையின் மடியில்** 12 . 02 . 1952



**ஆண்டவன் அடியில்** 24 . 12 . 2024

எமது குடும்பத் தலைவி

## அமரர் வரதலட்சுமி முத்துக்கிருஷ்ணன் (வரதா)

**திதி: மார்கழி அபரபக்க நவமி (12.01.2026)**

அன்பின் உருவாய் வாழ்ந்த எம் தாயே
வாழ்வின் வசந்தமென வந்துதித்த வரமே - வரதா
ஆண்டொன்று ஆனதம்மா - நீங்கள்
எம்மை விட்டுப்பிரிந்து
ஆறவும் முடியவில்லை
அழுத கண்ணீர் காயவுமில்லை
ஓயாது வாட்டுதம்மா தினம் தினம் உம் நினைவு
விண்ணில் நீர் விரைய விதி செய்த கோலத்தால்
கண்ணில் நீர் சொரிந்து கலங்கித் தவிக்கின்றோம்


நீங்கள் இல்லாத உலகம்
நிலவில்லாத இரவாய் கனக்கிறது
உம்மைப்பற்றி பயணிக்க முடியவில்லை
உங்கள் இன்முகம்தான் எங்கேயம்மா
ஏங்கித்தவிக்கின்றோம் ஏமாந்து போகின்றோம்
உங்கள் இல்லாமையை நிரப்புவதற்கு
இவ்வுலகில் யாருமில்லை ... மீண்டும் இங்கு
வாராயோ அம்மா எம் மீளாத்துயர் தீர்க்காயோ
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**மீனாட்சி அம்மன் கோவில் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**
**077 385 9450**

**என்றும் உம் நினைவுடன்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 28 . 01 . 1947



**மறைவு** 10 . 01 . 2026

## இராசையா குகேந்திரன்

**(Retired purchasing officer - Sigma Company)**

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா குகேந்திரன் அவர்கள் 10.01.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சோதிமதியம்மா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற புனிதவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிவாம்பிகை, குலேந்திரன் ஆகியோரின் சகோதரனும், லம்போதரன், தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சன், மாதுரி ஆகியோரின் மாமனாரும், வைஷ்ணவி, கல்பனா, லக்ஷ்மன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் நாளை (13.01.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பெருமாக்கடவை,**
**அளவெட்டி தெற்கு,**
**அளவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 60439) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல் இழுபறியில் சிதைந்த நிலாவரை மீண்டும் புதுப்பொலிவு!

## வலி. கிழக்குப் பிரதேசசபை நடவடிக்கை

**யாழ்ப்பாணம், ஜன.12**

**தொல்பொருள் திணைக்களத்தினரின் அசமந்தப் போக்கால் கவனிப்பாரற்றிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழர் மரபுரிமைச் சின்னமான நிலாவரைக் கிணற்றுச் சூழல் கடந்த வியாழக்கிழமை வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் சிரமதானம்மூலம் துப்புரவு செய்யப்பட்டது.**

நிலாவரைக் கிணறு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் நேரடி முகாமைத்துவத்திலேயே இருந்து வந்தன. சபையின் நிதி ஒதுக்கீட்டில் இப்பகுதி சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்தது.

எனினும், 2021-2023 காலப்பகுதியில் தொல்லியல் திணைக்களம் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இங்கு அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் விகாரை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

இதனை அப்போதைய தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து, அவர் மீது நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டன. நிர்வாக முடக்கம் மற்றும் சீரழிவு தொல்லியல் திணைக்களத்தின் தலையீடு மற்றும் நுழைவுக் கட்டணம் வசூலிப்பதில் ஏற்பட்ட தடைகள் காரணமாக, சபையின் பதவிக்காலம் முடிந்த பின்னர் இந்தப் பகுதி முற்றாகக் கைவிடப்பட்டது.

இதனால் கிணற்றைச் சூழவுள்ள பகுதிகளில் மதுபானப் போத்தல்கள், பொலித்தீன் கழிவுகள் மற்றும் பற்றைகள் நிறைந்து, சுற்றுலாப் பயணிகள் முகம் சுழிக்கும் நிலைக்கு இந்தப் பகுதி தள்ளப்பட்டது.

இதுகுறித்து சமூக வலைத்தளங் களிலும் ஊடகங்களிலும் கடும் விமர்சனங்கள் எழுந்த நிலையில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை யின் முன்னாள் தவிசாளர் தியாகராஜாநிரோஷ், சபை உறுப்பினர் அ.கமலறேகன், சபைப் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் ஒன்றிணைந்து சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.

உடைந்திருந்த பார்வையாளர் இருக்கைகள் மற்றும் நுழைவாயில் கதவுகள் சீரமைக்கப்பட்டு புதிய பெயர்ப் பலகைகள் மற்றும் பொலித்தீன் பாவனைக்குத் தடை விதிக்கும் விழிப்புணர்வுப் பலகைகள் நடப்பட்டன. (ச-66)

## வைரஸ் நோய் பரவல் இலங்கையில் உயர்வு

இலங்கையில் வைரஸ் நோய்கள் பரவுதலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்ப்ளூவன்ஸா ஏ, பி மற்றும் இன்ப்ளூவன்ஸா அல்லாத வைரஸ் நோய்களின் பரவலும் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையின் தொற்றுநோய் நிபுணர் கே.வி. சி. ஜனக தெரிவித்துள்ளார். அதேவேளை கொழும்பு மாவட்டத்தில் சிக்கன்குனியா அதிகரித்துள்ளது. அத்துடன் கடந்த 9 நாள்களில் நாட்டில் 2170 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

**Angel International School, Manipay**

**VACANCY: Economics Teacher**

Applications are invited from suitably qualified candidates for the position of **Economics Teacher**.

**QUALIFICATIONS REQUIRED:**

- Bachelor's Degree in Commerce (B.Com) / Managment (BBA)
- Ability to Teach in English medium
- Ability to Teach Cambridge A/L Curriculum
- Minimum of three (3) years teaching experience as a Economics Teacher in a reputed school.

**APPLICATION PROCEDURE:**

Interested applicants are invited to apply within 7 days of this advertisement with a Curriculum Vitae with Two (2) non-related referees via Email to:
**hr@aismanipay.com**

Angel International School, Mathers Lane, Manipay

**IMMEDIATE VACANCIES**

**Position :**
Work Supervisor
**Qualification :**
HND / TTI or NVQ 4 or 5
**Experience :**
With or without experience

**Position :**
Traning Supervisor
**Qualification :**
A/L 3 passes in Tec subjects

Attractive remuneration will be offered to the right candidates.

Work Location - Jaffna Area

Contact No
071 0520 877 / 071 9752 481
Email : sithira.p@sierra.lk

Sierra

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 11 . 1950



மறைவு 11 . 01 . 2026

**அன்னலட்சுமி வினாசித்தம்பி**

அல்லாரை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வினாசித்தம்பி அன்னலட்சுமி 11.01.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும், பரமு வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகளும், பரமு வினாசித்தம்பியின் பாசமான மனைவியும், சிவகுமாரி, சிவபாலன், சிவநந்தினி, சிவமலர், கௌரிபாலன் ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவசோதிலிங்கம், கருணசிங்கம், சுதாகரன், மிதுனா, ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுர்சனனன், அபிஷனன், சுவதிகன், விதுர்னா, சதுர்சா, பவித்திரா, கவிசனா, லக்ஷனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஷாத்விக் இன் பேரன்பூட்டி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2026) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 11.00 மணியளவில் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

கௌரிபாலன் : 077 207 3157
சிவபாலன் : 077 703 9201
சிவநந்தினி : 077 388 8531

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 03 . 1936



மறைவு 10 . 01 . 2026

திருமதி

**இராஜேஸ்வரி பாலராஜா**

உடுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி பாலராஜா அவர்கள் 10.01.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை திகதி பின்னர் அறியத்தரப்படும்.

சிங்கம் வீதி,
உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
வசந்தினி (சுதா) 0775474406
ஜெகதீசன் 0742913330

(CS/31243) ER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடினைக் கைதுசெய்வதற்கு அவசியம் எதுவும் இல்லை!

அதிபர் ட்ரம்ப் 'பம்மல்'



**வொஷிங்டன், ஜன. 12**

**ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினைக் கைது செய்வதற்கு அவசியம் எழவில்லை என, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெளிப் படையாகத் தெரிவித்துள்ளார்.**

வெனிசுலா அதிபர் மதுரோவைக் கைதுசெய்ததைப் போன்று, ரஷ்ய அதிபர் புடினையும் அமெரிக்கா கைதுசெய்யவேண்டும் என்று உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி கூறியிருந்தார். அத்துடன், புடினைக் கைதுசெய்வது தொடர்பில் வேறுசில தரப்புகளும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருந்தன. இதையடுத்தே, புடினைக் கைதுசெய்வதற்கு அவசியம் எழவில்லை என ட்ரம்ப் கூறியுள்ளார்.

அதிபர் புடினுக்கும் எனக்குமான உறவு தனித்துவமானது. அவர் மிகச்சிறந்த தலைவர். எனினும், உக்ரைன் விவகாரத்தில் நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன். இந்தப்போரை இலகுவாகத் தீர்க்க முடியும் என நினைத்தேன். அது மிகவும் கடினமாக உள்ளது. எனினும், தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ம)



## வெனிசுலாவின் வளங்கள் அமெரிக்கக் கட்டுப்பாட்டில்

வெள்ளைமாளிகை அறிவிப்பு

வொஷிங்டன், ஜன. 12

வெனிசுலாவின் எண்ணெய் வளங்கள் மீதான கட்டுப்பாடு முற்றுமுழுதாக தமது கைகளுக்குள் வந்துள்ளது என, வெள்ளைமாளிகை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். வெனிசுலாவின் அதிபர் மதுரோ கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து. அந்த நாட்டின் எரிசக்திக் கட்டமைப்பைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்கா தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவந்தது. இதன் தொடர்ச்சியாகவே, வெனிசுலாவின் எண்ணெய் வளங்கள் அனைத்தும் தமது கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளதாக வெள்ளைமாளிகை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வெனிசுலாவின் எண்ணெய்க் கட்டமைப்பு முற்றாகச் சீர்குலைந்துள்ளது. அதை நாம் மறுசீரமைக்கவேண்டும். இதற்காக அங்கு, 100 பில்லியன் டொலர் முதலிடவுள்ளோம். ஆர்வமுள்ள நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம். ஆனால் அனைத்து நிறுவனங்களும் எம்முடன் மட்டும்தான் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் வெள்ளைமாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)


## தமிழகத்தில் கை பலவீன நிலையே

சென்னை, ஜன. 12

தமிழகத்தில் கடந்த 60 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி பலவீனம் அடைந்துள்ளதை மறுப்பதற்கில்லை என, அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் பிரவீன் சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வின் கூட்டணியில் இருந்து காங்கிரஸ் விலகவுள்ளது என்றும், தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைக்கவுள்ளது எனவும் அண்மைக் காலமாகத் தகவல்கள் வெளிவருகின்றன. இவ்வாறான பின்னணியில், கட்சியின் நகர்வுகள் தொடர்பாக பிரவீன் சக்கரவர்த்தி ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார். இதன்போதே, காங்கிரஸின் வீழ்ச்சியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

நாங்கள் எப்போதும் சுய பரிசீலனைகளில் ஈடுபடுபவர்கள். எனவே, கடந்த அறுபது ஆண்டுகளாக கட்சி என்ற ரீதியில் எமது வீழ்ச்சியை உணர்ந்துள்ளோம். ஆதலால்தான், அதை மீளக் கட்டமைக்க வேண்டும் எனப் பாடுபடுகின்றோம். நிச்சயம் காங்கிரஸ் கட்சியை மீண்டும் பலமான சக்தியாகக் கட்டமைப்போம் என்றும் பிரவீன் சக்கரவர்த்தி கூறியுள்ளார். (ம)





உலகளாவிய பதற்றநிலை

## பிரிக்ஸ் நாடுகள் போர்ப் பயிற்சி!

ஜொகன்ஸ்பெர்க், ஜன. 12

உலகளாவிய பதற்றங்களுக்கு மத்தியில், பிரிக்ஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் நாடுகள் இணைந்து கடும் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. வெனிசுலாவின் அதிபர் மதுரோ அமெரிக்காவால் சிறைப்பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஈரான் மீது நேரடி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அதிபர் ட்ரம்ப் பரிசீலித்து வருகின்றார். அத்துடன், தென்னாபிரிக்கக் கடற்பகுதியை மையமாகக் கொண்ட போர்ப் பதற்றங்களும் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே, பிரிக்ஸ் கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கும் ரஷ்யா, சீனா, தென்னாபிரிக்கா, பிரேசில், ஈரான் ஆகிய நாடுகள் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. தென்னாபிரிக்கக் கடற்பகுதியிலேயே இந்தப் போர்ப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. (ம)



## தடயவியல் ஆய்வில் விஜயின் வாகனம்!

சென்னை, ஜன. 12

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜயின் தேர்தல் பரப்புரை வாகனம், தற்போது தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி, கரூரில் இடம்பெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் காரணமாக 41 பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்த விடயம் தொடர்பில் இந்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே, விஜயின் தேர்தல் பரப்புரை வாகனம் தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## உளவு தொடர்ந்தால் ஏவுகணைகள் வரும்!

தென்கொரியாவுக்கு வடகொரியா மிரட்டல்

பியாங்யாங், ஜன. 12

தென்கொரியாவின் உளவு நடவடிக்கைகள் தொடர்ந்தால், எவ்வித எச்சரிக்கையும் இல்லாமல் தாக்குதல் நடத்தப்படும் என்று வடகொரியா எச்சரித்துள்ளது.

அண்மைக்காலமாக நிலவிவரும் சர்வதேசப் போர்ப் பதற்றங்களுக்கு மத்தியில், வடகொரியாவை தென்கொரியா உளவு பார்த்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே, தென்கொரியாவின் உளவு நடவடிக்கைகள் தொடர்ந்தால், எவ்வித எச்சரிக்கையும் இல்லாமல் தாக்குதல் நடத்தப்படும் என்று வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது. தென்கொரியாவின் ட்ரோன்கள் எமது வான்பரப்பில் பல கிலோமீற்றர்கள் ஊடுருவி மூன்று மணிநேரம் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் கண்டறிந்துள்ளோம். எமது முக்கியமான இராணுவ மையங்களின் நடவடிக்கைகளை அவை கண்காணித்துள்ளன. இது பிராந்தியப் போருக்கும், சில வேளைகளில் உலகப்போருக்கும் வழியேற்படுத்தும் என்றும் வடகொரியா கூறியுள்ளது. (ம)

## தி.மு.க.விடமே மீண்டும் ஆட்சி

ஸ்டாலின் உறுதி

சென்னை, ஜன. 12

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், இருநூறுக்கும் மேற்பட்ட தொகுதிகளை எந்தத் தடங்கலும் இல்லாமல் தி.மு.க. கைப்பற்றும் எனத் தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வின் ஏற்பாட்டில் சென்னையில் பிரமாண்டப் பொங்கல் விழா நேற்று இடம்பெற்றது. இதில் தமிழக முதல்வர் ஸ்டாலின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றும்போதே, 'தி.மு.க.வுக்கு எதிராகத் தற்போது இடம்பெற்றுவரும் அனைத்துச் சதிகளும் முறியடிக்கப்படும். தி.மு.க. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும்' என்று கூறியுள்ளார்.

தி.மு.க.விடம் இருந்து ஆட்சியைப் பறித்தெடுக்க முடியாது என பா.ஜ.க.வினர் உணர்ந்துள்ளனர். அதனால்தான் அ.தி.மு.க.வின் துணையுடன் எமக்கு எதிராக ஏராளமான பொய்களையும் வதந்திகளையும் பரப்புகின்றனர். ஆனால், எம்மால் ஆற்றப்பட்ட பணிகளை மக்கள் அறிவார்கள் என்றும் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுணாவில் கிழக்கில் டெங்குக் கட்டுப்பாடு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுணாவில் கிழக்கு வட்டாரத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தென்மராட்சிப் பிரதேச செயலகம் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றின் அலுவலர்கள் இணைந்து, வட்டாரத்தில் உள்ள 293 இடங்களில் களப்பரிசோதனைகளை மேற்கொண்டனர். பரிசோதனையில் 102 இடங்களில் நுளம்பு பெருகுவதற்கான சூழலும், 22 இடங்களில் டெங்குக் குடம்பிகளும் அடையாளம் காணப்பட்டன.

12 குடியிருப்புகளுக்கு எச்சரிக்கை விடுத்து இரு வாரங்கள் கால அவகாசம் வழங்கி சிவப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன. வட்டாரத்தில் உள்ள குடியிருப்புகள், அரச தனியார் அலுவலகக் கட்டடங்கள், பாடசாலைகள், கட்டட நிர்மாண வேலைத் திட்ட இடங்கள் உள்ளிட்ட இடங்களில் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ச-9)



# கடலரிப்பால் அழிவடைந்த மூர்க்கம் கடற்கரைக்கு கல்வேலி

யாழ்ப்பாணம், ஜன.12

கடுமையான கடற்கொந்தளிப்புக் காரணமாக முற்றிலுமாக அழிவடைந்துள்ள மூர்க்கம் உல்லாசக் கடற்கரையைப் பாதுகாக்கும்வகையில் 200 மீற்றர் நீள கல்வேலி அமைக்க பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலையீட்டில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடும் கடற்கொந்தளிப்புக் காரணமாக பருத்தித்துறை - தும்பளை கிழக்கு மூர்க்கம் உல்லாசக் கடற்கரை கொங்கிறீட் வீதி உள்ளிட்ட கட்டுமானங்கள் அண்மையில் முற்றாக அழிவடைந்தன. இதுதொடர்பில் பருத்தித்துறை நகரசபைக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து யாழ்.மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலர் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பொறியியலாளர்கள் நேரடியாக விஜயம்செய்து களநிலைமைகளை ஆராய்ந்தனர்.

அதற்கமைய குறித்த பகுதியில் 200 மீற்றர் நீளத்துக்கு கல்வேலி அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு இந்தத் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

## புதிய...

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தமிழ்த் தேசியப் பேரவை உறுப்பினர்கள் சிலவாரங்களுக்கு முன்னர் நேரில் சந்தித்திருந்தனர். அதன்பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள நேற்றைய திகதியிட்ட கடிதத்திலேயே மு.க.ஸ்டாலின் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

"இலங்கையில் அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் அங்குவாழும் தமிழ் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது, முன்மொழியப் படும் மாற்றங்கள் இலங்கையில் மீண்டும் ஒற்றையாட்சிக்கு வழிவகுத்து, தமிழர்களை அடிமைப்படுத்தி அவர்களின் நியாயமான அரசியல் சுயநிர்ணய உரிமையைப் புறக்கணிக்கும் வகையில் அமைந்துள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த கடந்த 16 ஆண்டுகளாக இந்த ஒற்றையாட்சிக் கட்டமைப்பு, பாரம்பரியமாகத் தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள் தொகை மாற்றங்கள், நில அபகரிப்புக்கள் மற்றும் தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றுக்குத் தொடர்ந்து வழிவகுத்து வருகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் போர்வையில் ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்தி வருகின்றது.

தற்போது முன்மொழியப்பட்ட கட்டமைப் பு'ஏக்கிய ராஜ்ஜிய' (ஒற்றையாட்சி அரசு) மாதிரியை வலுப்படுத்துவதாகத் தெரிகின்றது. இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களைப் புறக்கணித்து, அதன்மூலம் அவர்களை மேலும் ஓரங்கட்டி அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து, சிறுபான்மையாக உள்ள தமிழரின் உரிமைகளைக் காத்து, பன்மைத்துவம் மற்றும் சமத்துவம், மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம், இனச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய கோட்பாடுகளை நிலைநிறுத்தும் வகையில் கூட்டாட்சியியல் ஏற்பாடுகளை அரசமைப்புத் திருத்தத்தில் சேர்க்க இலங்கையை இந்தியா வலியுறுத்தவேண்டும்.

இலங்கையில் புதிய அரசியலமைப்புத் தொடர்பாக அந்த நாட்டின் தமிழ்ப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து, தங்கள் அச்சங்களையும் கவலையையும் தெரிவித்தனர். நம் தாய்த்தமிழ்ச் சொந்தங்கள் பாதிக்கப்படாமல், அவர்களின் சமவுரிமையைக் காக்க இந்திய அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்" என்று அந்தக் கடிதத்தில் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். (அ-எ-26-27)

## உயர்தரப்...

என என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பரீட்சை நாடு முழுவதும் உள்ள 2 ஆயிரத்து 86 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கடந்தாண்டு நவம்பர் மாதம் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக, மாணவர்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு உயர்தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன. அதிதீவிர வானிலையால் தேசிய அடையாள அட்டைகளை இழந்த மாணவர்கள், கிராமசேவை உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் தற்போது பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள், பரீட்சை நிலையங்களுக்கு தடையின்றிச் செல்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மாவட்டச் செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள் தொடர்பில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் பரீட்சைத் திணைக்களத்தின் 1911 என்ற துரித இலக்கத்தை தொடர்புகொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## வடக்கு...

மிதமான மழை வீழ்ச்சி கிடைக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகிய போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மிகக் கனமழை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் எதிர்பார்த்தவளவு மழை வீழ்ச்சி கிடைக்கவில்லை.

காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் வலுவிழக்க ஆரம்பித்துள்ள நிலையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்குச் சற்று மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும் வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-எ-66)

## விசேட...

உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தச்சோதனை நடவடிக்கைகளில் குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 14 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 275 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 150 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 507 சாரதிகளும், அபாயகரமான முறையில் வாகனம் செலுத்திய 39 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பாக 5 ஆயிரத்து 244 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான இந்த விசேட தேடுதல் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-இ)

## வருமான...

ளார். இது தொடர்பாக அஞ்சல் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த அஞ்சல் ஊழியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் 2025 இல் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஜூன் மாதம் 378 உப அஞ்சல் அதிபர்கள் நிரந்தர நியமனங்களைப் பெற்றனர். கடந்த செப்ரெம்பர் மாதம் ஆயிரம் அஞ்சல் உதவியாளர்களின் நியமனங்கள் முறைப்படுத்தப்பட்டன.

இந்தநிலையில் திறந்த போட்டி மூலம் 600 அஞ்சல் சேவை அதிகாரிகளை பணியமர்த்துவதற்கான ஆட்சேர்ப்பு நடந்து வருகின்றது என்றும், எதிர்வரும் பெப்ரவரி மாதம் நியமனங்கள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார். (அ-எ-இ)

## வடக்கு ரயில்...

பிமல் ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர நிதியுதவியில் இருந்து, இந்த முதற்கட்டச் சீரமைப்புப் பணிகளுக்காக 5 மில்லியன் அமெரிக்க டொலர் பயன்படுத்தப்படவுள்ளது. இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான ரயில்வே கட்டுமான நிறுவனத்தால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு ரயில் தடம் மஹவ முதல் ஓமந்தை வரை, ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரை, மதவாச்சி முதல் மன்னார் வரை என மூன்று கட்டங்களின் கீழ் சீரமைக்கப்படவுள்ளது. (அ-எ-இ)

## உடைமையில்...

ஐஸ் போதைப்பொருளும், மற்றையவரிடம் இருந்து 39 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அராலிப் பகுதியைச் சேர்ந்த 19 மற்றும் 30 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## மின்சாரசபை...

சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், கிளிநொச்சியில் உள்ள மின்சாரசபைக்குச் சொந்தமான சுற்றுலா இல்லத்தில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள், சான்றுப்பொருள்களுடன் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113)

## ரயிலில்...

முத்தமிழ் வீதி, கொட்டடியைச் சேர்ந்த சி.சிவலக்சன் (வயது-23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலுடன், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் விபத்துக்குள்ளாகியுள்ளார். பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முயன்றபோதே இந்த விபத்து நடந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார். (அ-எ-26-66-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோர் அதிகாரசபையால் விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகள்

கொழும்பு, ஜன.12

நுகர்வோர் விவகார அதிகார சபையால் கடந்த வருடம் ஆயிரத்து 540 விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகாரசபையின் வரலாற்றில், ஒரு வருட காலத்தில் நடத்தப்பட்ட அதிகூடிய நிகழ்வுகள் இவையாகும்.

அதிகாரசபையின் அதிகாரிகள் நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, மக்களை நேரடியாகச் சந்தித்து விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியுள்ளனர். அத்துடன் மின்னணு, டிஜிற்றல் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக, நுகர்வோர் மற்றும் வர்த்தகர் களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்த வருடம் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தை இலக்காகக்கொண்டு இந்த விழிப்புணர்வு நிகழ்வுகள் மேலும் விரிவுபடுத்தப்படும் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது. (க)

# கல்வியமைச்சுக்கு முன்பாக விமல் சத்தியாக்கிரகப் போராட்டம்

கொழும்பு, ஜன.12

புதிய கல்விச் சீர்திருத்தங்களை உடனடியாக மீளப்பெறுமாறு வலியுறுத்தியும், அதற்குப் பொறுப்பேற்று கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் எனக்கோரியும் இன்று திங்கட்கிழமை முதல் கல்வி அமைச்சுக்கு முன்னால் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் வேலைத்திட்டமே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இந்தச் சீர்திருத்தங்களுக்கான பாடநெறித் தொகுப்புகளில், ஆபாச இணையத்தளங்கள் மற்றும் ஆபாச யூரியூப் சேனல்களுக்கான இணைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை மிகவும் அதிர்ச்சியளிக்கின்றது. எந்தவொரு கல்விச் சீர்திருத்தமும் நிபுணர்களின் ஆலோசனையுடனும், முன்னோடித் திட்டங்கள் ஊடாகவும் மிகவும் அவதானமாகவே முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனவே, தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக அனைத்துப் பெற்றோரும் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இணைய வேண்டும் - என்றார். (ச)

## சமகால அரசியல் உரையரங்கு

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் அரங்கில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியற் துறையின் முதுநிலை விரிவுரை யாளர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (க-27-66)



துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தின் இரண்டாம் நாள் நேற்றுமுன்தினம் பால்குட அபிஷேகத்துடன் கற்பூரத் திருவிழா நடைபெற்றது. (க-100)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- AV வீதி முகப்புடன்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4km தூரம்
- விலை பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்பு:- 076 860 2770 076 987 8617**

(CS 31245) ER

## மரண அறிவித்தல்

**மேரி மார்கிறேற் யோண்சன் பசில் (பவளம்)**



யாழ்ப்பாணம், சில்லாலையை பிறப்பிடமாகவும் 171, கொழும்புத்துறை வீதி,பாண்டியந்தாழ்வு,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி மார்கிறேற் யோண்சன் பசில் (பவளம்) அவர்கள் (2026.01.11) ஞாயிற்றுக்கிழமை நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை - மேரித்திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற யோண்சன் பசிலின் அன்பு மனைவியும்,லொய்ஸ்,அலிஸின் அன்புத் தாயாரும், குமாரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஜோசவ் மரியநாயகம் மற்றும் அன்ரனிநாயகம், பரிமளம், தருளம், தயாளம் ஆகியோரின் சகோதரியும், றூபி, ஜேம்சன், யஸ்ரின், Fr.கிருபாகரன், அன்ரன் லூக், ஜேன், லலி,ஐறின் ஆகியோரின் மைத்துனியும், மேரி ஏஞ்சல், மேரி இவேஞ்சல், பிரியன், நிவியனின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

(CS 31244) ER

தோற்றம் 22.11.1947 மறைவு 11.01. 2026

**அன்னாரின் நல்லடக்கத் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்:
குடும்பத்தினர்
மகள் - 077 211 8784

# மன்னார் மருத்துவமனைகளுக்கு ஐ.ஒ.எம். மருத்துவ உதவிகள்

மன்னார், ஜன.12

ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர் களுக்கான அமைப்பின் ஊடாக (I.O.M), மன்னார் மாவட்ட மருத்துவ மனைகளுக்குப் பகிர்ந்தளிக்கும்வகையில், சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருள்கள் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்த வர்களுக்கான அமைப்பின் துணைத்

தூதுவர், இடம்பெயர்வு மருத்துவ அதிகாரி மருத்துவர் சிமியோனெட்டி அசிஸ், ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுகளின் இடம்பெயர்வு சுகாதார மருத்துவர். ஆர்.எம்.உதீர சரித்ரா ஹரிச்சந்திர ஆகியோர் இணைந்து, மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.எச்.எம்.ஆஸாதிம் பொருள்களைக் கையளித்தனர். புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மருத்துவமனைகளில் நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு நோயாளர் விடுதிகளில், நோயாளர்கள் பயன்படுத்துகின்ற ஒரு தொகுதி பொருள்களே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. (க-56)



# வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

சாவகச்சேரி, ஜன.12

நாவற்குழி பொது நூலகத்தால் நடாத்தப்படும் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாவற்குழி உப அலுவலகத்தில் அமைந்துள்ள கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். சாவகச்சேரி பிரதேசசபையின் தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.பார்த்தீபன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.ஜெயரூபன், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் தி.சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் சஞ்சிகை வெளியீடு, இலவச அங்கத்துவம் வழங்கல் என்பன இடம்பெறும். (க-131)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org